# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • மே 11, 2019

Weekly E-paper • MAY 11, 2019




# திருடப்படும் வாக்குகள்!

மா.உதயகுமார்



**பறிபோகும் சமூகநீதி**

'பைந்தமிழ்' பாபு

**ஒழித்தாலன்றி வேறு வழி இல்லை**

தலையங்கம்



**பார்ப்பனர்-பிராமணர்?**

சுப.வீரபாண்டியன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2050 ● மே 11, 2019 Weekly E-paper ● MAY 11, 2019


# திருடப்படும் வாக்குகள்!

● மா.உதயகுமார்



தேர்தல் நடந்து முடிந்துவிட்டது. ஆனால் தேர்தல் ஆணையம் நடத்தும் நாடகங்கள் இன்னும் முடியவில்லை. திரைப்படங்களில் தான் கள்ளக் கடத்தல் கும்பல் இரவோடு இரவாக ஆள்நடமாட்டம் இல்லாத இடத்தில் பெட்டிகளைக் கைமாற்றும் காட்சியைப் பார்த்துவந்தோம். இப்போது தமிழ்நாட்டில் நேரடியாகப் பார்க்கிறோம்.

கோவையிலிருந்து 50 மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் தேனி நாடாளுமன்றத் தொகுதிக்கும் 20 ஒப்புகைச் சீட்டு இயந்திரங்கள் ஈரோடு நாடாளுமன்றத் தொகுதிக்கும் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றன. இதனை அனைத்து எதிர்க்கட்சியினரும் கண்டித்துள்ளனர்.


இப்படி வாக்கு இயந்திரங்கள் மாற்றப் படும் செய்தியை அறியும் போது, தேர்தலில் போட்டியிட்டவர்கள் எல்லோரும் நியாயமாக பதற்றப்படுவார்கள். ஆனால் இந்தப் பதற்றம் எதிர்க்கட்சியினரிடம் மட்டுமே இருக்கிறது. ஆளுங்கட்சியினர் எந்த ஒரு பதற்றமும் இல்லாமல் இருப்பதைப் பார்க்க முடிகிறது. எதிர்க்கட்சியினர் தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகளுக்குக் கண்டனம் தெரிவிக்கின்றனர். ஆளுங்கட்சியினர் பாராட்டுத் தெரிவிக்கின்றனர். வாக்கு இயந்திரங்கள் மாற்றப்படுவது ஆளுங் கட்சியினரின் நன்மைக்காகவே என்பது இதிலிருந்து உறுதிப்படுகிறது.

ஆளுங்கட்சியினரின் நன்மைக்காகச் செயல்படும் தேர்தல் ஆணையத்தின் இந்த நடவடிக்கை, வீட்டுக்குக் காவல் வைக்கப்பட்டிருக்கும் காவலரே வீட்டிலிருக்கும் பொன்னையும் பொருளையும் திருடனுக்கு அள்ளிக் கொடுப்பதைப் போன்றதாகும்.

வாக்கு இயந்திரங்களைப் பாதுகாக்கும் பணியைக் காவல் துறையினர் இராணுவத்தினர் ஆகியோர் செய்வது வழக்கம். ஆனால் இங்கு மட்டும்தான் வாக்கு இயந்திரங்களை அரசிடம் இருந்தும் ஆணையத்திடமிருந்தும் பாதுகாக்கும் பணியை அனைத்து எதிர்க்கட்சியினரும் செய்யும் அவலம் ஏற்பட்டிருக்கிறது.

அவலங்களைத் தொடர்ந்து ஏற்படுத்திவரும் ஆட்சியாளர்களுக்கு நாம் சொல்ல வேண்டியது : "அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்." ●

## ஒரு பகுத்தறிவாளரை இழந்தோம்



திமு கழகத்தின் உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர், தணிக்கைக் குழு உறுப்பினர் கோவை மாநகரச் செயலாளர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றியவரும், தமிழகச் சட்டமன்ற உறுப்பினர், மேலவை உறுப்பினர், இந்திய நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர் ஆகியவற்றின் மக்கள் பிரதிநியாக உழைத்தவரும், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர், கழகத்தலைவர் தளபதி ஸ்டாலின் ஆகியோரின் பேரன்புக்கு உரியவரும், இளைஞர்களுக்கு கழகக் கொள்கைகளையும், வரலாற்றையும், இலட்சியங்களையும் ஊட்டி வளர்த்தவருமான கோவைத் தென்றல் மு.இராமநாதன் அவர்கள் மறைவுற்றார். அவரின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது.

- தோழர் சுப.வீரபாண்டியன்

# பறிபோகும் சமூகநீதி


● 'பைந்தமிழ்' பாபு

பார்ப்பன ஆதிக்கத்தால் இரண்டாயிரம் ஆண்டுகள் அடிமையாக்கப்பட்டுக் கிடந்த தமிழ்ச் சமூகம் கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் முழுமையாக புறக்கணிக்கப்பட்டு வந்த நிலையை மாற்றிப் பார்ப்பனரல்லாதாரின் சமூகப் பொருளாதார நிலை உயரப் பாடுபட்ட இயக்கம் திராவிட இயக்கம். சாதி வருண அடிப்படையில் கல்வி மறுக்கப்பட்ட மக்களுக்கு அவ்வாய்ப்பை ஏற்படுத்தித் தர திராவிட இயக்கமும் தந்தை பெரியாரும் நடத்திய போராட்டங்கள் பல.

சமூக சமத்துவத்திற்கான விதையை இந்த மண்ணில் ஊன்றியது நீதிக்கட்சி. நீதிக்கட்சி ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதுதான் வகுப்புரிமை ஆணை பிறப்பிக்கப்பட்டு, சமூக நீதிக்கான வாசல் முதன் முதலில் திறக்கப்பட்டது.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருதம் படிப்பதற்குத்தான் வழி இருந்ததே தவிர, தமிழ் படிக்கக் கதவு அடைக்கப்பட்டது. நீதிக் கட்சிப் பெரியவர்கள் ஆர்.வெங்கடரத்தினம் நாயுடு, டி.என்.சிவஞானம் பிள்ளை, எஸ்.முத்தையா முதலியார், டாக்டர் ஏ.இலட்சுமணசாமி முதலியார் போன்றோர் போராடிப் போராடித்தான் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழி கற்பிக்கப்படுவதற்கு வழிவகுத்தனர்.

நீதிக் கட்சி ஆட்சிக்கு வந்தவுடன் கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு ஆகிய தளங்களில் சமூக நீதிப் பார்வையோடு பல்வேறு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டன. அதில் முக்கியமான ஒன்று மருத்துவக் கல்வி. நீதிக் கட்சி ஆட்சிக்கு வருவதற்கு முன்புவரை சமஸ்கிருதம் தெரிந்தால் மட்டும்தான் மருத்துவம் படிக்க இயலும். சமஸ்கிருதம் யாருக்கெல்லாம் தெரிந்திருக்கும் என்று நாம் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இந்த நிலையைப் பனகல் அரசர் தகர்த்தெறிந்தார். சென்னையில் இந்திய மருத்துவக் கல்லூரி உருவானது. அனைவரும் மருத்துவராவதற்கான வாய்ப்பு ஏற்பட்டது.




தலைவர் கலைஞர் தலைமையிலான திமுக ஆட்சியில் கல்வி, வேலைவாய்ப்பில் அதுவரை 31% ஆக இருந்த இடஒதுக்கீடு 49% ஆக உயர்த்தப்பட்டது. அது பின்னர் 69% ஆகவும் உயர்த்தப்பட்டது.

தந்தை பெரியார் ஒரு கூட்டத்தில் பேசும் போது " தாழ்த்தப்பட்ட மக்களை சட்ட மன்றத்தில் பார்த்துவிட்டேன். ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் அதிகாரிகளாகப் பார்த்துவிட்டேன். ஆனால் 110 ஆண்டுகால வரலாறு கொண்ட சென்னை உயர் நீதிமன்றத்தில் ஒரு தாழ்த்தப்பட்டவர் கூட நீதிபதியாக இல்லையே" என்று தன்னுடைய வேதனையை வெளிப்படுத்தினார். பெரியாரின் கருத்தை கவனத்தில் கொண்டு அன்றைய முதல்வர் தலைவர் கலைஞர் அந்த வாரத்திலேயே மாவட்ட நீதிபதியாக இருந்த ஏ.வரதராஜன் அவர்களுக்குப் பதவி உயர்வு வழங்கிச் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியாக்கினார். இந்தியாவிலேயே உயர் நீதிமன்ற நீதிபதியான முதல் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் இவர்தான். அவரே பின்னர் உச்ச நீதிமன்றத்திலும் முதல் பட்டியலினத்தைச் சேர்ந்த நீதிபதியாகப் பதவி உயர்வு பெற்றார்.

திமுக 2006-ம் ஆண்டு ஐந்தாவது முறையாக ஆட்சிக்கு வந்தவுடன் பின் தங்கிய கிராமப்புற மாணவர்களுக்கும், நகர்ப்புற மாணவர்களுக்குமிடையே உள்ள வேறுபாட்டைக் களைந்திடவும், கல்வி கற்பதில் சமமான வாய்ப்புகளை உருவாக்கிச் சமூக நீதியை நிலைநாட்டும் வகையில் சமச்சீர்க் கல்வியை அறிமுகப் படுத்தியதோடு மருத்துவக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், பல் மருத்துவக் கல்லூரிகள் உள்ளிட்ட தொழிற்கல்லூரிகளில் சேர்வதற்கு, அதுவரை கட்டாயமாக இருந்த நுழைவுத் தேர்வு முறையை ரத்து செய்து சட்டம் இயற்றினார் அன்றைய முதல்வர் தலைவர் கலைஞர் .




ஆனால் இன்றைக்கு நிலை என்ன? நீட் எனப்படும் நுழைவுத் தேர்வினால் ஏழை மற்றும் கிராமப்புற மாணவர்களின் மருத்துவக் கனவு சிதைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாகப் பணியில் உள்ள ஆசிரியர்களை, தகுதித் தேர்வில் தேர்ச்சி பெறவில்லை எனக் கூறி விளக்கம் கேட்கிறது கல்வித்துறை

இன்னொரு பக்கம் நீதிபதிகள் தகுதித் தேர்வில் யாரும் தேர்ச்சி பெற முடியாத வகையில் கேள்வித்தாள் கடினமாக தயாரிக்கப்பட்டதாகக் குற்றச்சாட்டு .

நீதிக் கட்சியும் திராவிட இயக்கங்களும் கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பெற்றுத் தந்த உரிமைகளைப் பறித்திடவே நுழைவுத் தேர்வும் தகுதித் தேர்வும். ●

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**தமிழ்மறவன்**
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**
**www.peravai.com**
**www.peravainoolagam.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-4204 7162

## பாவலர் தமிழேந்தி மறைந்தார்!



மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளர் அய்யா வே.ஆனைமுத்து அவர்களுக்கு அணுக்கமாக இருந்து செயல் பட்ட பாவலர் அரக்கோணம் தமிழேந்தி 5.5.2019 அன்று காலமானார். அவருக்குப் பொதுச்செயலாளர் சுபவீ அவர்கள் இறுதி வணக்கம் செலுத்தினார்.

## மதுரைத் தோழர்களுடன்..



8.5.2019 அன்று திராவிட இயக்கத் தமிழர் பேரவைப் பொதுச்செயலாளர் சுப.வீரபாண்டியன் அவர்கள் மதுரையில் பேரவைப் பொறுப்பாளர்களுடன் கலந்துரையாடினார்.

## வணிகர் மாநாடு



5.5.2019 அன்று சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு அனைத்து வணிகர் சங்கங்களின் முதல் மாநில மாநாடு, 36-ஆம் வணிகர் தின மாநாட்டில் தோழர் சுப.வீரபாண்டியன் பங்கேற்று உரையாற்றினார்.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்



**தங்கத் தாலியை கழற்றிய மாணவி**

● கோவையில் உள்ள ஒரு மையத்தில் திருப்பூர் மாணவி தேர்வெழுதவந்தார். அவர் திருமணமானவர். அதிகாரிகளின் வற்புறுத்தலின்படி, நகைகளை கழற்றி கணவரிடம் கொடுத்துவிட்டு சென்றார். அவர் தங்கச்சங்கிலியில் தாலியை இணைத்து அணிந்திருந்தார். அதை கழற்றிவிட்டு செல்லுமாறு பெண் அதிகாரி கூறினார். அது தாலிக்கொடி என்று கூறியும், அனுமதிக்க மறுத்து விட்டார். இதனால் கண்கலங்கிய அந்த மாணவி, தாலிக்கொடியை கழற்றி தனது கணவரிடம் கொடுத்துவிட்டு, கண்ணீருடன் மையத்துக்குள் சென்றார்.

## ஒழித்தாலன்றி வேறு வழி இல்லை

2016 ஆம் ஆண்டு செப்டம்பர் 22 ஆம் நாள், அன்றைய முதல்வர் ஜெயலலிதா உடல் நலமின்றி அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பெற்றார்.

அன்றிலிருந்து சரியாக இரண்டு மாதத்தில் 2016 நவம்பர் 23 அன்று நீட் தேர்வைத் தமிழகத்தில் அனுமதிக்கும் அரசாணை வெளியிடப் பட்டது. இதற்குப் பின்னணியில் இருந்தது பா.ஜ.க. இந்திய அளவில் மருத்துவத் துறையில் தமிழகம் முன்னிலையில் இருந்து வந்தது. இது பா.ஜ.க வுக்குப் பெரும் எரிச்சலை ஏற்படுத்தியது. காரணம் பா.ஜ.கவை என்றுமே ஏற்காத தமிழகம், பெரியார் மண் என்பதுதான்.

அதனால் தமிழக மாணவர்களை மிகவும் பின்தள்ளச் செய்ய, நீட் தேர்வு மூலம் வடிகட்டும் ஏற்பாட்டைச் செய்தது பா.ஜ.க மத்திய அரசு . விளைவு அனிதா, பிரதிபா போன்ற மாணவர்கள் மரணத்திற்குப் பலியானார்கள்.

இந்நிலையில் தமிழகம் கல்வியில் பிற மாநிலங்களை விட முன்னிலையில் இருப்பதனால் , தமிழகத்திற்கு நீட் தேர்வில் விலக்கு அளிக்க முடியாது என்று சொல்கிறார் பிரகாஷ் ஜவடேகர். அதாவது முன்னிலையில் இருக்கும் தமிழகத்தைப் பின்னிலைக்குக் கொண்டு செல்லும் குரல் இங்கு தொனிக்கிறது.

அதுமட்டுமன்று, நீட் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு _

தீவிரவாதிகளைப் போல மெட்டல் டிடக்டர் சோதனை. காதில், கழுத்தில் இருக்கும் நகைகள் கழற்றப்படுகின்றன. வளையல்கள் கால் கொலுசு போன்ற அனைத்து நகைகளும் அகற்றப்படுகின்றன. நெற்றிப் பொட்டு அழிக்கப்படுகின்றது. தலை முடிச்சோதனை என்ற பெயரில் கலைக்கப்பட்டுத் தலைவிரி கோலமாக்கப் படுகின்றனர், உடைகள் கூடச் கிழிக்கப்படுகின்றன. ஏறத்தாழப் பெண்கள் "கைம்பெண்"கோலத்திற்கு ஆளாக்கப் படுகின்றனர்.

ஆனால் எந்தப் பார்ப்பனனின் பூணூலையும் அவர்கள் தொடுவதில்லை.

இவ்வளவு கொடுமைகளையும் தாண்டி மாணவர்கள் எப்படி நிம்மதியாகத் தேர்வு எழுதுவார்கள் ?

அவர்கள் மாணவர்களா, அல்லது மத்திய நீட் தேர்வு மையத்தின் அடிமைகளா ?

நீட் தேர்வை ஒழித்தாலன்றி, இதற்கு வேறு வழியே இல்லை.

# பார்ப்பனர் - பிராமணர்
# என்ன வேறுபாடு?

● சுப.வீரபாண்டியன்



பார்ப்பனர், பிராமணர் என்னும் சொற்கள் குறித்த பார்வை இன்றைய சூழலில் மிகத் தேவையானதாகவே உள்ளது. எந்த விவாதமும் யாரையும் காயப்படுத்துவதற்காக இல்லை என்பது தெளிவானால்தான், எல்லோருக்குமானதாக இந்தச் சொற்கள் அமையும்.

பார்ப்பனர் என்பது வசைச்சொல்லும் இல்லை, பிராமணர் என்பது நாகரிகச் சொல்லும் இல்லை. பார்ப்பனர் என்பது வசைச் சொல்லாக இருக்குமானால், சங்க இலக்கியம் தொடங்கி, பாரதியார் வரையில் அதனைப் பயன்படுத்தியிருக்க மாட்டார்கள்.

சங்க இலக்கிய நூல்களில் ஒன்றான குறுந்தொகையில் 156 ஆவது பாடல்

பார்ப்பன மகனே பார்ப்பன மகனே
செம்பூ முருக்கின் நல்நார் களைந்து
தண்டொடு பிடித்த தாழ்கமண் டலத்து
படிவ உண்டிப் பார்ப்பன மகனே

என்று அமைந்துள்ளது. மூன்று வரிகளில் நான்கு முறை பார்ப்பான் என்ற சொல் இடம்பெற்றுள்ளதைப் பார்க்க முடிகிறது.

அகநானூற்றுப் பாடல் ஒன்றில், பாலை பாடிய பெருங்கடுங்கோ,

தூதுஓய் பார்ப்பான் மடிவெள் ஓலை
படையுடைக் கையர் வருந்திறம் நோக்கி

என்று எழுதுகின்றார். திருவள்ளுவர் ஒரு குறளை,

மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்

என வடித்துள்ளார். இப்படிப் பல மேற்கோள்களைக் காட்ட முடியும். கொஞ்சம் கடுமையாகப் பாரதியார், "தண்டச் சோறுண்ணும் பார்ப்பான்" என்று எழுதுகின்றார்.

எனவே பாப்பான் என்பது வசைச் சொல் அன்று. அது தொழிலைக் குறிக்கும் சொல். மறைந்த தமிழறிஞர் பெருஞ்சித்திரனார், "குறி பார்ப்பார், கணி (சோதிடம்) பார்ப்பார் என்பதால் அவர்களுக்குப் பார்ப்பார் என்று பெயர் வந்தது தம்பி" என்று ஒருமுறை என்னிடம் சொன்னது இன்றும் என் நினைவில் உள்ளது. தச்சு வேலை செய்வோர் தச்சர் என்பது போல, ஆசிரியப் பணி செய்வோர் ஆசிரியர் என்பது போல, குறியும், சோதிடமும் பார்ப்போர் பார்ப்பனர் என்று ஆயினர்.

இதில் என்ன வசை இருக்கிறது? மேலும் உயர்வாக இதற்குப் பொருள் சொல்வோரும் உண்டு. பார்ப்பு என்னும் சொல்லுக்குப் பறவையின் குஞ்சு என்று பொருள். இந்தப் பொருளில் அந்தச் சொல் பயன்படுத்தப்பட்டிருப்பதற்கும் இலக்கியச் சான்றுகள் உள்ளன.

அள்ளற் பழனத்து அரக்காம்பல் வாயவிழ
வெள்ளம் தீப்பட்டதென வெரீஇப் - புள்ளினந்தம்
கைச்சிறகாற் பார்ப்பொடுக்கும் கவ்வை.......

எனவரும் முத்தொள்ளாயிரப் பாடல் பார்ப்பு என்னும் சொல்லைப் பறவையின் குஞ்சு என்னும் பொருளில்தான் ஆள்கிறது. சரி, இதற்கும் பார்ப்பனர்களுக்கும் என்ன தொடர்பு? வலிந்து ஒரு தொடர்பு சொல்லப்படுகிறது. முட்டைக்குள் இருக்கும் குஞ்சின் உயிர் வேறு, முட்டை உடைந்து வெளியில் வரும் குஞ்சின் உயிர் வேறு. எனவே அதற்கு இரு பிறப்பு. அதனைப் போலவே, உபநயனம் (பூணூல் அணிதல்) முடிந்தவுடன் அவர்கள் அடுத்த பிறப்பை எடுத்து விடுகின்றனர். அதனால்தான் அவர்களுக்கு இருபிறப்பாளர்கள்(துவிஜர்) என்று பெயர். அந்த அடிப்படையில்தான் பார்ப்பனர் என்று பெயர் வந்தது என்று பார்ப்பன ஆதரவாளர்கள் எழுதுகின்றனர்.

அப்படியே வைத்துக் கொண்டாலும் அதுவும் மிக உயர்வாகவே அவர்களைக் காட்டுகிறது. சரி, இது வசைச் சொல் இல்லை என்றாலும், ஐயர், அந்தணர், பிராமணர் என்ற சொற்களை ஏன் நீங்கள் பயன்படுத்தக்கூடாது என்று கேட்கின்றனர்.

ஐயர் என்பது ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கு மட்டும் உரியதில்லை. அது பொதுவாகத் 'தலைமை'யைக் குறிக்கும் சொல். "என்ஐ முன் நில்லன்மீர்" என வரும் திருக்குறள் அடிக்கு, என் தலைவன் முன் நில்லாதீர்கள் என்றுதான் பொருள். எனவே ஐயர் என்ற சொல்லைக் கையாண்டால். அவர்களை நாம் தலைவர்களாக ஏற்றுக் கொண்டுவிட்டோம் என்று பொருள். அவர்கள் எப்படி நமக்குத் தலைவர்கள் ஆவார்கள்?

அந்தணர் என்போர் அறவோர். ஆதலால், அச்சொல், எல்லாச் சமூகத்திலும் உள்ள சான்றோர்களைக் குறிக்கும். ஒரு குறிப்பிட்ட சாதியினருக்கு மட்டும் உரிய சொல் இல்லை.

பிராமணர் என்னும் சொல்லையே பலரும் கையாள்கின்றனர். அதனைத்தான் அவர்களும் விரும்புகின்றனர். ஆனால் அந்தச் சொல்லுக்கு என்ன பொருள்? பிரம்மனிலிருந்து வந்தவர்கள் என்றாகும். பிரம்மனையே ஏற்காத என்போன்றோர் எப்படிப் பிரம்மனிலிருந்து வந்தவர்களாக அவர்களை ஏற்க முடியும்?

இன்னொரு முதன்மையான பார்வையும் இங்கு தேவைப்படுகிறது. அவர்கள் பார்ப்பனர் என்றால், நான் ஆசிரியராகவோ, சலவைத் தொழிலாளியாகவோ, வேறு ஏதோ ஒரு தொழில் சார்ந்த பெயருக்கு உரியவராகவோ இருக்கலாம். ஏனெனில் அது தொழில் சார்ந்த சொல்.

ஆனால் பிராமணர் என்பது வருணம் சார்ந்த சொல். ஆதலால் அவர் பிராமணர் என்றால் நான் சூத்திரனாக அல்லது பஞ்சமனாகத்தானே இருக்க முடியும். (சத்திரியரும், வைசியரும் தமிழ்நாட்டில் இல்லை).

அவர்களை உயர்த்தி என்னைத் தாழ்த்தும் அந்தப் பிராமணர் என்னும் சொல்லை சொல்லை நான் ஏன் பயன்படுத்த வேண்டும்?

இவையெல்லாம் ஒரு புறமிருக்க, நம் எதிர்ப்பு வெறும் சொல்லுக்கானது இல்லை. அவர்களின் செயல்களுக்கானது. கடவுள், மதம் ஆகியனவற்றை அடிப்படையாகக் கொண்டு எவ்வளவு பிளவுகளை, மோதல்களை இணக்கமாக வாழ்ந்து கொண்டிருந்த மக்களிடம் அவர்கள் ஏற்படுத்தினார்கள் என்னும் அடிப்படையில்தான் நம் அறச்சீற்றம் எழுகிறது.

எடுத்துக்காட்டாக, மிகச் சாதாரணமாக இருந்த பிள்ளையார் வழிபாட்டை எப்படியெல்லாம் மோதல்களுக்குப் பயன்படுத்தினார்கள் என்பதை எண்ணிப் பார்த்தாலே பல உண்மைகள் புரியும். ●

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secretary, Dravida Iyyakka Tamilar Peravai.